<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 17.02.2026

அசல் வழக்கு எண். 196/2015

வா.சா. 1 – பிரபு, த/பெ. கருணாகரன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>குறுக்கு விசாரணை</u>

எதற்காக வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் இடம் வாங்கி உள்ளேன் காலி செய்ய சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எப்பொழுது வாங்கினீர்கள் என்றால் 2007 ஆம் ஆண்டு வாங்கினேன் . யாரிடமிருந்து வாங்கினீர்கள் என்றால் மேகலா என்பவரது பவர் ஏஜென்ட் ஆனந்தன் என்பவரிடமிருந்து வாங்கினேன். மேகலா என்பவர் பொது அதிகாரம் கொடுக்கவில்லை என்றால் சரியில்லை அவர் பொது அதிகாரம் கொடுக்காத அவரிடம் இருந்து நீங்கள் கிரயம் வாங்கி உள்ளீர்கள் ஆகவே அவை செல்லாது என்று மேகலாவின் கணவர் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியில்லை. உங்களுக்கு எதிராக அசல் வழக்கு எண் 1357/2008 திருப்பெரும்புதூர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நீங்கள் மூன்றாவது பிரதிவாதி என்றால் சரிதான். அந்த வழக்கில் மேகலா முதல் பிரதிவாதி என்றால் சரிதான் ஆனந்தன் இரண்டாவது பிரதிவாதி என்றால் சரிதான். அந்த வழக்கில் நீங்கள் கிரயம் வாங்கியது செல்லாது என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியில்லை. அவ்வாறு இருக்கும் பொழுது ஏன் ஆனந்தன் பொது அதிகார முகவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் பணம் கொடுத்து வாங்கியது எப்படி செல்லாமல் போய்விடும். ஆனந்தனை தரப்பினராக வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

சொத்துக்கான அசல் பத்திரம் உங்களிடம் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். பத்திரமா கொடுக்கவில்லை நீங்கள் வழக்குக்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. மேகலாவின் கணவர் வாங்கிய சொத்து மேகலாவுக்கு உரிமை இல்லை என்றால் சரியில்லை. உங்கள் மீது 2008 ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் 2007 ஆம் ஆண்டு ஆனந்தன் என்பவரிடம் கிரயம் வாங்கி விட்டேன். 2008 ஆம் ஆண்டு உங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து விட்டார்கள் அதிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் நீங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை ஆகவே கால வரையறை சட்டப்படி வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியில்லை. உங்களுக்கு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்த பிறகும் கோதண்டம் மற்றும் மேகலா அங்குதான் வசித்து வந்தார்கள் சுவாதீனம் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 2015 ஆம் ஆண்டு அத்துமீறி நுழைந்துவிட்டது தவறு என்று சொன்னால் சரியில்லை. நீங்கள் வாங்கியதிலிருந்து அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். நீங்கள் மின் இணைப்பு பெற்றது தவறு என்றால் சரியில்லை. நீங்கள் வீட்டு வரி செலுத்தியது தவறு என்று சொன்னால் சரி இல்லை. ஆனந்தனுக்கு விற்பனை செய்வதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரி இல்லை அவருடைய பொது அதிகாரம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரி இல்லை. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. கோதண்டம் என்பவரது மூதாதையர் சொத்து என்று சொன்னால் சரியல்ல. மனைவி பெயரில் சும்மா எழுதி வைத்தார் என்றால் சரியில்லை. நீங்கள் கிரயம் வாங்கியது கோதண்டம் என்பவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியில்லை. தாவா இடம் சென்று

போய் பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். கிரைய பத்திரம் இரண்டு பங்காளிகளிடம் வாங்கியது என்று உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. மேகலாக்கு எழுதிக் கொடுக்க அதிகாரம் இல்லை என்றால் சரியில்லை. தெரிந்து ஆனந்தனுக்கு பவர் கொடுக்கவில்லை என்றால் சரியில்லை. திருட்டுத்தனமாக கையொப்பம் வாங்கி விட்டார்கள் என்றால் சரியில்லை. அதை கேன்சல் செய்து விட்டார்கள் வாங்கியவுடன் கேன்சல் செய்ததால் செல்லும் என்றால் சரியில்லை. உங்கள் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.